**23.01.2026 <u>அசல் வழக்கு எண்.109/2018</u> Starting Time : 4.47 p.m.**

**<u>வா.சா.1 திரு.முனுசாமி த/பெ.பச்சையப்பன்.</u>**

**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, 1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1**). பச்சையப்பன், அம்மாக்கண்ணு ஆகியோரது திருமணம் எப்போது நடைபெற்றது என்றால் அதை பற்றி தெரியாது. எங்கு நடந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது. திருமணம் நடந்ததற்கான ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் உள்ளது. மலேசியாவிற்கு சென்றது யார் என்றால் அம்மாக்கண்ணு. அவர் எப்போது சென்றார் என்றால் அதுபற்றி தெரியாது. அம்மாக்கண்ணு எப்போது இறந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அம்மாக்கண்ணுவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் ஐந்து பேர் ஆவார்கள். அவர்களின் பெயர் என்ன என்றால் சொர்ணம், எல்லப்பன் மற்றும் நான், மண்ணுபெருமாள், ஆறுமுகம் ஆகியோர்கள் ஆகும். மேற்படி ஐந்து பேரும் எங்கு பிறந்தோம் என்றால் மலேசியாவில் பிறந்தோம்.

**2**). மேற்படி ஐந்து பேரும் பச்சையப்பனின் பிள்ளைகள் என்பதற்கு ஆதாரம் உண்டா என்றால் உள்ளது. என்னுடைய பிறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன். மற்றவர்களின் பிறப்பு சான்றிதழ் வேறு மொழியில் இருப்பதால் அதை தாக்கல் செய்ய இயலவில்லை. என்னை தவிர மற்ற நான்கு பேரும் எங்கு உள்ளார்கள் என்றால் மலேசியாவில் எனது சகோதரர் எல்லப்பன் வசித்து வந்து காலமாகிவிட்டார், மண்ணுபெருமாள் கொவளை கிராமத்தில் வசித்து வந்து காலமாகிவிட்டார், சொர்ணம் சென்னையில் வசித்து வந்து காலமாகி விட்டார், ஆறுமுகம் மலேசியாவில் வசித்து வருகிறார். மேற்படி மூன்று பேரின் இறப்பு சான்றிதழ் மற்றும் ஆறுமுகத்தின் பிறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

**3**). மேற்படி காலமான மூவருக்கும் வாரிசுகள் இருக்கிறார்களா என்றால் மண்ணுபெருமாள் திருமணமாகாமல் காலமாகிவிட்டார், எல்லப்பன் மற்றும் சொர்ணம் ஆகியோருக்கு வாரிசுகள் இருக்கிறார்கள். எனது தாய் தகப்பனின் வாரிசுகளில் என்னை தவிர வேறு யாரும் இந்த வழக்கினை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவர்களுக்கு இந்த வழக்கு பற்றிய விவரம் தெரியுமா என்றால் தெரியும். நான் மலேசியாவில் தான் பிறந்து வளர்ந்தேனா என்றால் நான் பிறந்தது மலேசியா ஆகும், எனக்கு ஒரு வயது இருக்கும்போது

என்னை எனது பாட்டி வீடான கொவளையில் வந்து விட்டுவிட்டார்கள். எனது பாட்டி எனது தகப்பனாரின் தாயார் ஆவார். நான் இங்கு தான் வளர்ந்து வசித்து வந்தேன் என்பதற்கு ஆதாரம் உண்டா என்றால் உண்டு.

**4**). எனது அம்மா கொவளையில் வசித்து வந்தாரா என்றால் இல்லை, மலேசியாவில் வசித்து வந்தார், அவ்வப்போது இங்கு வந்து செல்வார். தாவா சொத்துக்கள் எனது தாயார் இரப்பர் தோட்டத்தில் வேலை செய்து வந்த வருமானத்தில் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துக்கள் யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றால் என்னுடைய அனுபவத்தில் உள்ளது. அதற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

**5**). பச்சையப்பன் எப்போது மலேசியா சென்றார் என்றால் வெள்ளைக்காரன் ஆட்சியின் போதே மலேசியா சென்றுவிட்டார். எப்போது எனது தகப்பனார் கொவளைக்கு திரும்பி வந்தார் என்றால் கொஞ்ச காலம் வந்து இருந்தார், மீண்டும் சென்றுவிட்டார், எப்போது என்று எனக்கு தெரியாது. எனக்கு என்ன வயதாகிறது என்றால் 71 வயதாகிறது. 01.07.1955ல் எனக்கு என்ன வயது இருக்கும் என்றால் நான் 1953ல் பிறந்தேன், இரண்டு வயது இருக்கும். 01.07.1955ல் நான் பச்சையப்பன் உடன் சேர்ந்து தாவா சொத்துக்களை வாங்கியதாக சொன்னால் அது சரியா, தவறா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**6**). எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் என்ன வயது குறிப்பிட்டுள்ளேன் என்றால் 70 என்று குறிப்பிட்டுள்ளேன். குடும்ப கர்த்தா என்ற முறையில் 01.07.1955ல் பச்சையப்பன் பெயரில் சொத்துக்கள் வாங்கப்பட்ட விவரம் எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் என் அப்பா சொல்லி தான் தெரியும். கூட்டு குடும்ப உழைப்பாலும், பூர்வீக சொத்தின் வருமானத்தினாலும் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்று நான் கூறியுள்ள பட்சத்தில், கூட்டு குடும்பம் என்பது யார், யார் என்றால் எனது பெற்றோர் மற்றும் நாங்கள் ஐந்து பேரும் ஆவோம். பூர்வீக சொத்துக்கள் எங்கு உள்ளது என்றால் கொவளையில் உள்ளது. பூர்வீக சொத்துக்களை பொறுத்து இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

**7**). பச்சையப்பன் எங்கு காலமானார், அப்போது நான் எங்கு இருந்தேன் என்றால் கொவளையில் காலமானார், நானும் அங்கு தான் இருந்தேன்.

பச்சையப்பன் காலமானபோது நானும் கொவளையில் தான் இருந்து வந்தேன் என்பதற்கு ஆதாரம் உண்டா என்றால் உண்டு. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். பச்சையப்பன் இரண்டாவதாக யாரையும் திருமணம் செய்யவில்லை என்று குறிப்பிட்டுள்ளபட்சத்தில், முதலாவதாக யாரை திருமணம் செய்தார் என்றால் எனது தாயார் அம்மாக்கண்ணுவை திருமணம் செய்தார்.

**8**). முனியம்மாள் வேறு ஒரு நபரை திருமணம் செய்து அவருடன் குழந்தைகள் உடன் வாழ்ந்து வந்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி முனியம்மாள் யார் என்றால் எனது அப்பாவின் அக்காள் மகள் ஆவார். முனியம்மாள் வேறு ஒருவரை திருமணம் செய்துள்ளார் என்று கூறியுள்ள பட்சத்தில், அந்த நபர் யார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொது கூட்டு குடும்ப சொத்தில் போலியான ஆவணங்கள் ஏற்படுத்தியுள்ளார்கள் என்று கூறியுள்ளபட்சத்தில், அது என்ன போலியான ஆவணம், எப்போது ஏற்படுத்தப்பட்டது என்றால் போலியான ஆவணம் என்ன என்று எனக்கு தெரியாது.

**9**). பச்சையப்பன் என்பவருக்கு வாரிசு சான்றிதழ் கேட்டு நான் வட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்தேன் என்றால் சரிதான். நான் வட்டாட்சியர் அலுவலகத்தில் பச்சையப்பன் என்பவருக்கு பல மனைவிகள் உள்ளதால் வாரிசு சான்று வழங்க முடியாது என்று கூறிவிட்டார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பல மனைவிகள் யார், யார் என்பதை பற்றி தெரியுமா என்றால் தெரியாது, முனியம்மாள் மட்டும் தான் தெரியும். வட்டாட்சியர் எனது தகப்பனாருக்கு பல மனைவிகள் உள்ளதாக கூறி எனது மனுவினை நிராகரித்ததற்கான காரணத்தை நான் கேட்டு தெரிந்துக் கொண்டேனா என்றால் இல்லை.

**10**). என்னை பச்சையப்பனின் வாரிசு என்று மலேசியா அரசாங்கம் அங்கீகரித்தும் 8,9 பிரதிவாதிகள் எனது தந்தைக்கு வாரிசு சான்றிதழ் தர மறுத்துவிட்டனர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மலேசிய அரசாங்கம் நான் தான் பச்சையப்பனின் வாரிசு என அங்கீகாரம் செய்தததற்கு ஆவணம் ஏதும் உண்டா என்றால் உள்ளது, அது எனது தம்பியிடம் உள்ளது. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நாங்கள் பச்யசையப்பன் வாரிசுகள் இல்லை என்பதால் தான் வருவாய் துறையினர் எங்களுக்கு வாரிசு சான்றிதழ் வழங்க மறுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல,

அவருக்கு இரண்டு மனைவிகள் உள்ளதால் நீதிமன்றத்தில் வாங்கிக் கொள்ளுமாறு தெரிவித்துவிட்டார்கள். முனியம்மாளும் அவரது பிள்ளைகளும் வாரிசுகள் என்பதால் தான் எங்களுக்கு வாரிசு சான்றிதழ் வழங்க மறுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. வாரிசு சான்றிதழ் பெற நீதிமன்றத்தில் வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

**11).** வட்டாட்சியர் 1 முதல் 7 பிரதிவாதிகளிடம் இலஞ்சம் பெற்றுக் கொண்டு அவர்கள் பெயரில் போலியாக பட்டா வழங்கியுள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, மணியக்காரர் தான் அவ்வாறு செய்தார். எந்தெந்த சொத்துக்களுக்கு எந்தெந்த வருடத்தில் மேற்படி பட்டா வழங்கினார்கள் என்றால் அது ஆவணத்தை பார்த்து தான் கூற முடியும்.

**1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்பட்டது.**

**Ending time : 5.36 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.